முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1386

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.07.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா போற்றி
   ஞானிகளை வணங்க வகை செய்த
   ஞான தேசிகனே போற்றி போற்றி
   ஞாலமதில் சுப்ரமணியர் யானும்
2. யானுமே அரங்கன் உமக்கு
   ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஆனி மாதம் 31 ம் நாள், 16.07.2023, ஞாயிற்றுக்கிழமை)
   நாட்டிடுவேன் அரங்கன் சக்தி பெருகி நிற்க
   வானவர்கள் போற்றும் தர்மத்தை
3. வாரி வையகமெங்கும் கொடையாக அருளுகின்ற
   அருளுகின்ற அரங்கனே உன் தர்மம்
   அகிலத்தை மாற்றி அமைக்கும்
   ஆற்றல்பட சன்மார்க்க விதியை அகிலத்தார் பின்பற்ற உறுதிபட
4. உறுதிபட ஞானமாக அருளுகின்ற
   உயர்ஞானியே உன் மார்க்கம் இந்த உலகத்தையே வெல்லும்
   உண்மைபட உன்வழி மக்கள் தொடர
   உலகோர்க்கு சடுதி மாற்றம் உண்டு
5. நன்மை கருதி உன் தர்மத்தை
   நாடிவந்து தொண்டு செய்து
   நாட்டிடுவேன் பொருளுதவி செய்து
   ஞானம் பயில உன்மூலம் உலகோர் ஞானிகளாவது உறுதியப்பா
6. அப்பனே உறுதிதந்தேன் அரங்கன் உன்வழி
   அனைத்தும் சித்தியாக மாற
   சக்திமிகு அரங்கன் தீட்சை பலம்
   சகலருக்கும் வெற்றி தரக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–